பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 06 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. அகமதாபாத் விமான விபத்து ஏற்பட்ட இடத்தை சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தற்போது பார்வையிட்டு வருகிறார்.

2. விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளும் செய்துதரப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

3. அகமதாபாத் விமான விபத்து நடந்த இடத்தில் ராணுவம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் மீட்புக்குழுக்கள் முழுவீச்சில் பணியில் ஈடுபட்டுள்ளன.

4. இந்தியாவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அளித்துவரும் ஆதரவுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

5. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் தரத்தை உயர்த்தும் நோக்கில், பொறியாளர்களுக்கான பணி ஒதுக்கீட்டு முறையை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்துள்ளது.

--இனி விரிவான செய்திகள்

<<<<<>>>>>

அகமதாபாதிலிருந்து 242 பயணிகளுடன் பிற்பகல் மணி 1.38-க்கு கிளம்பிய ஏர் இண்டியா விமானம் **AI-171** புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும், பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாக காவல்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி எமது அகமதாபாத் செய்தியாளர் அபர்ணா தெரிவிக்கிறார்.

இந்திய ராணுவம் மீட்புப்பணிகளில் உதவுவதற்காக 130 பேர் அடங்கிய பல குழுக்களை அகமதாபாத் அனுப்பியுள்ளது.

இதில், இடிபாடுகளை அகற்றுதல், விரைவு மீட்புப்படையினர், தீயணைப்புப்பிரிவினர், மருத்துவக்குழுக்கள் என பல்வேறு பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

தேசிய பேரிடர் மீட்புப்படையின் ஆறு குழுக்களும், எல்லை பாதுகாப்புப்படையின் இரண்டு குழுக்களும், மத்திய தொழிலக பாதுகாப்புப்படையினரும் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் அருகில் உள்ள மருத்துவக்கல்லூரி விடுதி மீது விழுந்து விபத்துக்குள்ளானதாக கர்ணாவதி தமிழ் சங்கத்தின் தலைவர் திரு பாலாஜி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***Sound Byte - பாலாஜி – 45 Sec.)***

இதில் பயணம் செய்தவர்களில் 169 பேர் இந்தியர்கள் என்றும், 53 பேர் பிரிட்டனை சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் கனடாவை சேர்ந்தவர் என்றும், ஏழு பேர் போர்ச்சுக்கல்லை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதற்காக அகமதாபாதில் **B J** மருத்துவக்கல்லூரியில் **DNA** பரிசோதனை செய்வதற்கான வசதியை குஜராத் மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நாடே உறுதுணையாக இருப்பதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரும் இந்த விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் அதிர்ச்சி அடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் மற்றும் சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு ஆகியோரை தொலைபேசியில் தொடர்புகொண்டு விவரங்களை கேட்டறிந்தார்.

இந்த துயரச்சம்பவம் தமக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி உத்தரவின்பேரில், சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, அகமதாபாதில் விமான விபத்து ஏற்பட்ட இடத்தை இன்று மாலை நேரில் பார்வையிட்டார்.

இந்த விபத்து மிகுந்த துயரம் மிகுந்தது என்றும், நாட்டையே உலுக்கியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்று அவர் அறிவித்தார்.

பின்னர், அதிகாரிகளுடன் இந்த விபத்து குறித்தும் மருத்துவக்கல்லூரி விடுதியில் ஏற்பட்ட இழப்புகள் குறித்தும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

விமான விபத்து நடந்த பகுதிக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவும் விரைந்துள்ளார்.

இந்த விபத்து குறித்த தகவல்களை வழங்குவதற்கென கட்டுப்பாட்டு அறை ஒன்றை சிவில் விமான போக்குவரத்துத்துறை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி, 0 1 1 2 4 6 1 0 8 4 3 என்ற தொலைபேசி எண்ணும், 9 6 5 0 3 9 1 8 5 9 என்ற கைபேசி எண்ணும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத் நகர காவல்துறையும் 0 7 9 2 5 6 2 0 3 5 9 என்ற எண்ணை அறிவித்துள்ளது.

இதேபோல், ஏர் இண்டியா நிறுவனமும், 1 8 0 0 5 6 9 1 4 4 4 என்ற எண்ணை தொடர்புகொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம் என்று கூறியுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த பிரிட்டன் நாட்டை சேர்ந்தவர்களின் உறவினர்கள் தொடர்புகொள்ள வசதியாக, புதுதில்லியில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் 4 4 2 0 7 0 0 8 5 0 0 0 என்ற உதவி தொலைபேசி எண்ணை அறிவித்துள்ளது.

இந்திய ரயில்வே இரண்டு சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

இன்றிரவு பதினொன்றரை மணிக்கு அகமதாபாதிலிருந்து, புதுதில்லிக்கு ஒரு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

மற்றொரு சிறப்பு ரயில் நள்ளிரவு 12 மணிக்கு அகமதாபாதிலிருந்து – மும்பைக்கு இயக்கப்பட உள்ளதாக ரயில்வேத்துறை அறிவித்துள்ளது.

இந்த விபத்து குறித்து வேதனை தெரிவித்துள்ள ஏர் இண்டியா நிறுவனத்தின் தலைவர் சந்திரசேகரன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்த விமான விபத்தையடுத்து, அகமதாபாத் விமான நிலையத்தின் விமான சேவைகள் அனைத்தும் சில மணி நேரங்களுக்கு முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

தற்போது, குறைந்த எண்ணிக்கையில் விமானங்கள் இயக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, மத்திய அமைச்சர்கள் மற்றும் பலர் இந்த விமான விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

இந்தியாவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அளித்துவரும் உறுதியான ஆதரவுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன், இன்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது, இதை தெரிவித்ததாக கூறியுள்ள திரு ஜெய்சங்கர், இந்த உரையாடலின்போது இந்தியா – பிரான்ஸ் இடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் கூறினார்.

இருநாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கை கொண்டிருப்பதை இந்த பேச்சுவார்த்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் இந்த தொலைபேசி உரையாடலுக்கு பின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் தரத்தை உயர்த்தும் நோக்கில், பணியில் ஈடுபடும் பொறியாளர்களின் பணிச்சுமையை குறைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், ஒவ்வொரு நெடுஞ்சாலை பொறியாளருக்கும் பத்து நெடுஞ்சாலைப் பணிகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானப்பணிகளை மேற்பார்வையிடுவது, தேசிய நெடுஞ்சாலை திட்டங்களின் பராமரிப்புக்கென தனித்தனியாக பொறியாளர்களை பணி அமர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை பொறியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் குறித்த திட்ட அறிக்கையை அளித்தபின் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள ஒப்பந்த நிறுவனங்கள் 60 நாட்கள் வரை அவகாசம் எடுத்துக்கொள்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொறியாளரும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நெடுஞ்சாலைத் திட்டங்களை பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் குறித்து மாதாந்திர அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

அமெரிக்கா - ஈரான் இடையே நிலவிவரும் இறுக்கமான சூழ்நிலை காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தூதரக அதிகாரிகள் மற்றும் ராணுவ நிலைகளில் உள்ள அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கையை கணிசமாக குறைப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாடு மேற்கொண்டுள்ளது.

பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து முக்கிய அதிகாரிகள் தவிர மற்றவர்களை அமெரிக்கா திரும்ப செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடுள்ளன.

இதேபோன்று, பக்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க தூதரகங்களில் உள்ள அதிகாரிகள் மாற்று இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பெங்களூருவில் **RCB** கிரிக்கெட் அணியின் வெற்றி கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட உயிரிழப்பு காரணமாக, கைது செய்யப்பட்ட அந்த கிரிக்கெட் அணியை சேர்ந்த மூன்று நிர்வாகிகளுக்கு கர்நாடக உயர்நீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது.

இந்த உத்தரவை பிறப்பித்த நீதிபதி திரு எஸ் ஆர் கிருஷ்ணகுமார், இதுதொடர்பாக மேற்கொள்ளப்படும் காவல்துறையின் புலனாய்வுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Sift Kaur Samra** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் முனிச்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் திலக் வர்மா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். பந்து வீச்சு பிரிவில் வருண் சக்ரவர்த்தி மூன்றாவது இடத்திலும், **Ravi Bishnoi** ஏழாவது இடத்திலும் உள்ளனர்.

--------

இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணியில் காயம் காரணமாக **Shuchi Upadhyay** பதிலாக, ராதா யாதவ் சேர்க்கப்பட்டுள்ளார்.

**<<<<<END>>>>>**